கல்விச்சேவையில் 30 ஆண்டுகள்

100% தேர்ச்சி உறுதி

# கலைமகள்

## கல்வி நிறுவனங்கள்

நர்சரி & பிரைமரி பள்ளிகள் LKG to V
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் LKG to X
மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளிகள் LKG to XII

ISO 9001 - 2000 அங்கீகாரம் பெற்றது

ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (D.T.Ed.,)

மற்றும்

கல்வியியல் கல்லூரி (B.Ed.,)

மெயின்ரோடு, செம்பனார்கோவில் - 609 309.

மத்திய, மாநில அரசுகளின் அங்கீகாரம் மற்றும்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவும் பெற்றது.

விரைவில் உதயம்


கலைமகள் கல்வியியல் கல்லூரி (M.Ed.,)
கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கலைமகள் கேட்டரிங் கல்லூரி

அட்மிஷன் நடைபெறுகிறது

விவரங்களுக்கு :
(04364) 283410,
281150, 281040.

கல்லூரி மாணவர் இதழ்

அறிந்துபரப்பி ஆக்கம் செய்குவோம்



நன்கொடை
ரூ.5/-

WELCOME

டிஜி மீடியா
டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

- அரசியல் விளம்பரங்கள்
- திருமண வாழ்த்துக்கள்
- சினிமா விளம்பரங்கள்
- டிஜிட்டல் போட்டோ - வீடியோ
- போட்டோ லேமினேசன்
- விசிட்டிங் கார்டுகள்
- பழைய கறுப்பு-வெள்ளை படங்களை கலராக்குதல்
- டிஜிட்டல் ஆல்பம்

பஸ் ஸ்டாண்ட் பின்புறம், மயிலாடுதுறை.
போன் : 04364-222261
செல் : 98437 90043, 93646 20550



# கனவுகளின் காணிக்கைகள்



தூது 20 இளந்தூது செய்தி 1

# மாற்றம் ஏற்படுமா?

அறிவியல் நிறைந்த உலகில் ஆக்கங்கள் பல இருந்தாலும் அழிவுகள்தான் பெரிதாக மக்களின் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. சமீபத்தில் இந்தியாவின் தலைநகரான டெல்லியில் தீவிரவாதமானது தலைத்தூக்கி ஆடத்தொடங்கியது.

அறிவியல் கண்டுபிடிப்புக் கொண்டு வடிவமைத்த அழிவுமிகு ஆற்றலுடன் கூடிய குண்டு வெடித்ததில் ஏராளமானோர் உயிரினையும், உதிரத்தையும் உருக்குலையவைத்த அந்தக்கொடூரச் செயலும் கோரச்சம்பவமும் மக்களின் மனத்தில் மாறாத வடுவாய் நிலைத்துக் கொண்டிருக்கிறது.

தில்லி மட்டுமா? இன்னும் நம் கண்களைவிட்டு அகலாத எத்தனையோ குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இன்னும் நம் நெஞ்சத்தை விட்டு மறைந்துவிடவில்லை. இவ்வாறு செய்வதில் அவர்கள் என்ன சுகம் கண்டார்கள் என்றும் தெரியவில்லை. ஏன் இந்த தீவிரவாதம்? இன்னும் எத்தனை ஆண்டுகள் நீடிக்கும் இக்கொடியச் செயல்? கடைவீதியில் உலவிய மக்களை கொன்று குவிப்பதால் என்ன பலன் அடைந்துவிட்டார்கள்.

நாட்டின் தலைநகரில் நடந்த அக்கொடூரச் சம்பவம் அவர்களின் மனதை சிறிதுக்கூட உலுக்கவில்லை என்றால் அவர்கள் மனிதர்களாக இருப்பது அரிதுதான். போராடி சுதந்திரம் பெற்ற இம்மண்ணில்

**தீவிரவ்ாதத்தை எதிர்த்து எப்படிப் போராட போகின்றோம்?**

ஆசிரியர்.





# மலரட்டும் நல்வரவு

அன்பார்ந்த வாசகர்களுக்கு!


கடல் அலை ஓயாமல் காலம் முழுவதும் அடித்து கொண்டிருப்பது போல உங்களின் கற்பனை அலைகளும் சிந்தனைத் திறன்களும் வளர்ந்துக்கொண்டேச் செல்ல இளந்தூதுவின் இனிய வாழ்த்துக்கள்.

தென்றலின் சுவாசக்காற்றில் மலர்கள் மலர்வது போல உங்களின் கற்பனை ஊற்றில் நீர் கொண்டு விருட்சமாக வளர்ந்து வரும் நம் இளந்தூது 20 ஆம் ஆண்டின் சுவைமிகு கனியின் முதற்பாதியாம் செப்டம்பர் இதழினை களிப்போடு சுவைக்கத்தருகிறோம்.

காலங்கள் போற்றும் காவியங்களின் தனக்கென்த் தனி இடம் பிடித்திருக்கிறது. நம் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.இராதாகிருட்டினன் அவர்களையும் எங்களுக்குப் பல ஊக்கங்கள் தந்து இந்த இனிய இதழை எங்களின் முதல் ஆசிரியருமான ஏ.இசட் இராதாகிருட்டினன் அவர்களையும் ஆண்டுகள் பலப்பல ஆதரவுகள் தந்து எங்களை அரவணைத்து பல அறிவுரைகளையூட்டி வரும் பேராசிரியர்களையும், இளந்தூது குடும்ப உறுப்பினர்களையும் வணங்கி மகிழ்கிறோம்.

உலகம் ஒன்றும், திணைகள் இரண்டும், கனிகள் மூன்றும், . வேதங்கள் நான்கும், பால் இனம் ஐந்தும், சுவைகள் ஆறும், அதிசயங்கள் ஏழும், திசைகள் எட்டும், நவரத்தினங்கள் ஒன்பதும் என எண்ணிலடங்கா பல கற்பனைப் படைப்புகளுடன் கனவில் தேவதை காவிய இதழுடன் உங்கள் முன் தோன்றிட.......

ஆசிரியர்குழு








# பிஞ்சுக் கரமே விடுதலை என்றோ?



கனவுகளைச் சுமக்கும் வயதில்
கற்களைச் சுமக்க வைக்காதீர்
புத்தகங்களைச் சுமக்கும் வயதில்
புத்திகெட வைக்காதீர்
எண்ணங்களைச் சுமக்கும் வயதில் – இங்கு
எழுத்தறிவை இழக்க வைக்காதீர்
மந்தை ஆடுபோல் பள்ளிச் செல்கையில்
ஒண் சட்டையைச் சுமக்க வைக்காதீர்
கல்வி கற்க வேண்டிய வயதில்
களைபறிக்க வைக்காதீர்
நினைவுகளை நினைக்கும் வயதில்
நிலைகுனிய வைக்காதீர்
பாசங்களைச் சுமக்கும் வயதில்
பாதை மாற வைக்காதீர்
பறவைகளைப் போல் பறக்கும் வயதில்
கூண்டுக் கிளியைப் போல் அடைக்காதீர்
விளையாடி மகிழ வேண்டிய வயதில்
வியர்வை சிந்த வைக்காதீர்
பாடப் பழகும் வயதில், இங்கே
பாறை உடைக்க வைக்காதீர்
குயிலைப் போன்று கொஞ்சிப் பாடும் போது
குழந்தைகளைப் பணி என்னும் வார்த்தையால்
பயனின்றி வீணடித்து விடாதீர்.
ஒழிக குழந்தைத் தொழில்.



க.குமார்
முது தாவர மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் (நிறை)

# புரியாத புதிராக...



தண்ணீர் இல்லை என்றேன்
வெள்ளமாய்த் திரண்டு வந்தது
விளைநிலத்தில் விதை விதைத்தேன்
வெள்ளாமையும் தழைத்து வந்தது.
அறுவடைக்கு ஆள் இல்லை என்றேன்
அறுவடைக்கு இயந்திரமும் வந்தது
ஆனால் இப்போதோ
விவசாயம் செய்ய ஆள் இல்லை
படித்துவிட்ட இளைஞனோ
சேற்றில் கால் வைக்க மறுக்கிறான்
எனக்கு மென்பொருளில்தான் (சாப்ட்வேர்)
வேலை வேண்டும் என்கிறான்
இப்படியே சென்றால் வருங்காலம்
விவசாயம் மறைந்து போகும்.
நாளைய தலைமுறை கேட்கும்
விவசாயம் என்றால் என்ன என்று?



அ.சிவசங்கரபாரதி
இளம் தாவர உயிரியல் & தாவர உயிர்த் தொழில்நுட்பவியல் (நிறை)





# வேடிக்கை பார்த்தல்



பூமி பிளந்தாலும் பூமிகா சிரிச்சாலும்
வேடிக்கை பார்க்கிறான்.
திரிஷா ஆடினாலும் புதுமுகம் ஆடினாலும்
வேடிக்கை பார்க்கிறான்
நமீதா சிரிச்சாலும் நகரமே குலுங்கினாலும்
வேடிக்கை பார்க்கிறான்
ஸ்ரீகாந்த் பேசினாலும் சென்ட்ரல் மினிஸ்டர் பேசினாலும்
வேடிக்கை பார்க்கிறான்
விஜய் பேசினாலும் வலிமை புயல் வீசினாலும்
வேடிக்கை பார்க்கிறான்
விக்ரம் அடிச்சாலும் சுனாமி ஊரையே இழந்தாலும்
வேடிக்கை பார்க்கிறான்
வெட்டஒலி ஓடினாலும் ரொட்ட ஒலி கேட்டாலும்
வேடிக்கை பார்க்கிறான்
அர்ஜுன் ஓடினாலும் அஞ்சுஜார்ஜ் ஒலிம்பிக்கில்
ஓடினாலும் வேடிக்கை பார்க்கிறான்
இப்படி வேடிக்கை பார்க்கும் இளைஞனே
உன்னையும் உனது சமுதாயத்தையும் பற்றி
ஒரு நிமிடம் யோசித்து பார்
அதன்பின் இவ்வுலகமே
உன்னை திரும்பி பார்க்கும்—வியப்புடன்.
இளைஞனே வாழ்வில் போராடினால் நம்
இந்தியா இன்றே வல்லரசாகும்!

ந.பிரபாகரன்
இளம் ஆங்கிலம் (முதல்)

நாகை, திருவாரூர் மாவட்டத்திலேயே மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற (Hall Marks) ஹால் மார்க் முத்திரைப் பதித்த தங்க நகைகள் வாங்க

ஓரே நிறுவனம் . . . . .




எங்களின் 19-ஆம் ஆண்டு விழாப் போட்டிக்காக நினைவு பரிசுகளை வழங்கிய நாராயணன் ஜுவல்லரி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.





# வாழ்க இளைஞர் சமுதாயமே

நன்றாக கட்டிய
வீட்டில் மழை நீர்
நுழைவதில்லை
நற்சிந்தனையும் தெளிவும்
உள்ள ஓர் இளைஞன் மனத்தில்
தொட்டு விட்டுப் போகும்
தோல்வியை
எண்ணிச் சோர்ந்து விடாமல்
முடிவில்லா முயற்சிக்கு
முற்றுப்புள்ளி வைத்துவிடாமல்
முயன்றால் முடியும்
எனும் அறிவொளி தீபத்தை
ஏற்றிவிடு!
உந்தனின் முயற்சியால்
வரலாறு வாழ்த்தவில்லை
என்றாலும்
உன் வீட்டில் உள்ளவர்களாவது
வாழ்த்தட்டும்
வாழ்க இளைஞர்
சமுதாயம்! மலியட்டும்
இளைஞர்களின் வெற்றிகளால்!!!



இரா.பிரபு
முதுகலைத் தமிழ் (நிறை)

# இன்றையப் சுதந்திர தின விழா

சுதந்திரம் சுதந்திரம்
என்று சொல்கிறோம்
ஆனால் இன்றைய
சுதந்திர தின விழா.
இந்தியத்- தலைநகரங்களில்
பலத்தப் பாதுகாப்புடன்
உச்சக்கட்ட பாதுகாப்புடன்
குண்டு துளைக்காத
மேடையில் விழா
நடைபெறுகிறது
அதுதான் இன்றைய
சுதந்திர தின விழாவாம்!



செ.சரவணன்
முதுகலைத் தமிழ் (நிறை)

### ஹைக்கூ ...

முதியோர் இல்லங்கள் மூடப்படும்
பிள்ளைகள் தனக்கும்
வயதாகும் என்பதை உணர்ந்தால்....

சி.சத்தியராஜ்
இளம் தாவரவியல் (இடை)





# தாமதம்

பகலவன் வருவான் என்று
வெண்ணிலவு வெட்கப்பட்டு மறைந்தது...
மெல்ல இருள் விலகி
பகலவன் பகட்டாக ஒளி வீசினான்.
வெண்தாமரையும் இதழ் விரித்தது
என்னுடைய நேரம்...
பக்கத்து வீட்டுச் சேவல் பத்து மணிக்குக் கூவியது
அப்புறமென்ன மறுபடியும்
கல்லூரிக்குத் தாமதம்தான்...

### ஹைக்கூ ...

ஓவியனின் சித்திரம்
தெருவினில், அருகே
சிதறியபடி சில்லரைக் காசுகள்..

எம்.முரளி
முதுகலை வேதியல் (நிறை)

## நகைச்சுவை

நதீஷ் : டேய் ஏன்டா அண்ணன் வாசலிலேயும்,
தம்பி ரோட்டிலேயும் உட்கார்ந்து படிக்கிறாங்க?

ரங்கா : அண்ணனுக்கு என்ட்ரன்ஸ் பரிட்சைடா!
தம்பிக்கு பப்ளிக் பரிட்சைடா!

க.பாலா
இளம் வரலாறு (இடை)

# Sun Software College

SOFTWARE TRAINING AND DEVELOPMENT

An.ISO 9001:2000 Certified Institution (Affiliated to TCEDS)

TCEDS
COMPUTER EDUCATION

SSC

An.ISO 9001:2000 Certified Institution

TAMILNADU COMPUTER EDUCATION AND DEVELOPMENT SCHEME

(South India Reg. No. 371/2001)

**LARGEST NETWORK IN INDIA**

- Software
- Hardware & Network Technology
- WEB Design Course
- Multimedia Course
- Project

**Join HDCA Course Free for You..**

Intel
**COMPUTER FREE**
(1 Year Waranty)

Special Features

- International ISO 9001:2000 Certificate
- Book Material Free
- State Level Exam
- Internet Facility
- 100% Job Assurance

Razak Tower, #15, Cutchery Road, Mayiladuthurai - 1.
04364 - 226975, Cell : 9443187730
E-mail: ssunsoftware@sify.com






## வாழ்க்கை..

முள்ளில்தான் வாழ்க்கை
ஆனாலும் – சிரித்துக்கொண்டிருக்கிறது
ரோஜா!

மா.மணிகண்டன்
இளம் கணிதம் (நிறை)



## நிஜம்

மனிதா...
தோல்வியா ?
துவண்டு விடாதே!
நான் தலைகுனிவதால்தானே
உன்னால் எழுத முடிகிறது – பேனா!

பி.வி.செல்வம்
இளம் பொருளாதாரம் (இடை)



## தானம்

மண்ணில் புதைப்பதைவிட
பிறர் கண்களில் புதைப்போம்
நம் கண்களை...!

மா.மணிகண்டன்
இளம் கணிதம் (நிறை)

## ஹைக்கூ ...



நீ வெளிச்சத்தில் சென்றால் உலகமே
உன்பின் தொடரும்...
ஆனால் நீ அறியாமை என்ற இருட்டில்
சென்றால் உன் நிழல் கூட உன்பின் வராது

வி.கார்த்திக்
இளம் விலங்கியல் (இடை)

# தூதுவின் தூது

காலமெல்லாம் கஷ்டப்படும் கூலித்தொழிலாளியும், நடுத்தர வர்க்கத்தினரும் தன் உடல்நிலையை மருத்துவரிடம் காட்டுவதற்கு மயிலாடுதுறை அரசு மருத்துவ மனைதான் செல்கிறார்கள்.

மருத்துவமனைக்குச் செல்கிறேன் என்றாலே பெரும்பாலன நடுத்தர வர்க்கத்தினர் உடனே! மயிலாடுதுறை பெரிய ஆஸ்பத்திரிக்கா? என்ற பெயர்தான் கேட்கிறது.

அரசு பெரியார் மருத்துவமனையானது 18ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. பெரியார் மருத்துவமனை பேருந்து நிலையத்திற்கு அருகில் அழகான எழில்மிகு தோற்றத்துடன் அமைக்கப்பட்டது. நாளடைவில் தொய்வடைந்துவிட்டது.

நமது அரசு பெரியார் மருத்துவமனை 70000 சதுரஅடி சுற்றளவு கொண்டது. மருத்துவமனை தொடங்கப்பட்ட நாட்களில் மிகக் குறைந்தளவு சிகிச்சை பிரிவுகளே இருந்தன.

தற்போது பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, குழந்தைகள் நலப்பிரிவு, மகப்பேறு, குடும்பக்கட்டுப்பாடு, நவீன தடுப்பூசிகள், வெறிநாய்க்கடி மற்றும் பாம்புக்கடி சிகிச்சைகள் மற்றும் பல்வேறு வகையான சிகிச்சை பிரிவுகளை நமது தமிழக அரசாங்கம் அரசு மருத்துவமனைக்குச் செய்துதரப்படுகின்ற வசதிகள் மூலம் நலமுடன் வாழ்கின்றனர்.

ஒரு நாளைக்குச் சராசரியாக 1500 நபர்கள் வந்து பயனடைகின்றனர். இவர்கள் அல்லாமல் உள்நோயாளியாகத் தங்கி சிகிச்சை பெறுபவர்கள் சராசரியாக 350 நபர்கள் ஆவார்கள்.





இம்மருத்துவமனையில் ஆங்கில மருத்துவர்களுடன் சித்தமருத்துவர் ஒருவர் வந்து சிகிச்சை அளிக்கிறார். தற்போது அரசு ஆணைப்படி நவீன மாற்றமாக பால்வினை நோய் மற்றும் மனநோய் சிகிச்சைப்பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்டத் தலைமை மருத்துவமனையிலிருந்து மனநல மருத்துவர் வாரம் ஒருமுறை வந்து சிகிச்சை அளிக்கிறார்.

இங்கு ஆபத்து காலங்களில் உதவ ஆம்புலன்ஸ் வசதி உள்ளது. இங்குப் பணிபுரியும் மருத்துவர்கள் எண்ணிக்கை 220. ஒரு ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் மருந்து செலவுகள் ஆகிறது. மருத்துவமனை கணக்கு காட்டுகிறது.

இங்குப் பணிபுரியும் மருத்துவர்களும் செவிலியர்களும் தங்களுக்கு உடனடியாக இங்குச் சுற்றுப்புறத்தையும், மருத்துவமனை சுற்றி ஓடும் சாக்கடைக் கழிவுகளும் அதிக அளவு மாசுக் கட்டுப்பாட்டையும், மலேரியா கொசு உற்பத்திக்கும் அடிப்படையாக அமைகிறது. ஆகவே இதனை உடனடியாக சரிசெய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இளந்தூது மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இரண்டு ஆண்டுகளாகப் பல் மருத்துவ சிகிச்சைப்பிரிவு அமைத்து நாட்கள் பல ஆகியும் மருத்துவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. இவ்விதழின் மூலமாக எங்கள் மருத்துவமனைக்கு சிடி ஸ்கேன் வசதியும், ரேடியோலாஜிஸ்ட் வசதியும் இல்லை என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்கிறோம்.

ஆசிரியர்

## கைபிடித்தவள்

கண்ணுக்கு கண்ணாக பார்த்துக்கொள்வேன்
என்று எண்ணி கை பிடித்தவள் – இன்று
என் மனதை கலங்க வைக்கிறாள்
கலாச்சாரம் என்ற பெயரில்
ஆடை ஆபரணத்திற்காக.....


வீடு, மனை வாங்க விற்க அணுகவும்

N.P.S

ரியல் எஸ்டேட்

உரிமை : N.P.சந்திரசேகர் B.Sc.,
கல்லூரி சாலை, மேலையூர் – 609 107.
சீர்காழி தாலுக்கா,
நாகப்பட்டிணம் மாவட்டம்.
செல் : 9443573795, 9787354426






## வெளிச்சத்தைத் தேடி...!



வெண்ணிலவு வருகைக்கு
வரதட்சணை கேட்கும்
வேடிக்கையான உலகம்
இது...
வாழ வழியின்றித் தேய்பிறையாம்
ஏழைப் பெண்கள்...!
இருள் சூழ்ந்த இவ்வுலகில்
விடிவெள்ளி என்றுதான்
வருமோ?

இரா.பாண்டியராஜன்
இளம் வரலாறு (இடை)

## உலகம் உன் கையில்



உரசினால்
எரிந்துவிடுவோம் – எனத்
தெரிந்திருந்தும்
உரசிப்பார்க்கும்
தீக்குச்சியின் துணிச்சல்
உனக்கிருந்தால்? – இளைஞனே
உலகம் உன் கையில்!

எ.விஜயலெட்சுமி
இளம் இயற்பியல் (நிறை)

# நீங்கள் வெற்றியாளராக மாற

ஒருவர் வாழ்வில் வெற்றிபெற உயர்ந்த லட்சியம் தெளிந்த இலக்கு, சரியான திட்டமிடல் தேவை. இதை அடைய அவர்கள் மனதில் வெற்றிபெற வேண்டும் என்ற ஆசையே.

லட்சியம் + இலக்கு + திட்டமிடல் = வெற்றியாளர் ஆசை

ஒரு குறிக்கோளை அடைவதற்கு நமக்குள் கொழுந்து விட்டு எரியும் ஆசையிலிருந்து தான் வெற்றி பெறுவதற்கான தூண்டுதல் வருகின்றது. நெப்போலியன், "மனிதனின் மனம் எதையெல்லாம் சிந்தித்து நம்புகின்றதோ அதையெல்லாம் உண்மையிலேயே சாதித்து விடும்" என்று கூறினார்.

ஓர் இளைஞர் சாக்ரட்டீஸிடம் வெற்றியின் இரகசியத்தைப் பற்றிக் கேட்டார். அதற்குச் சாக்ரடீஸ் அந்த இளைஞரிடம் அடுத்த நாள் காலை ஆற்றங்கரை அருகில் தன்னைச் சந்திக்கும் படி சொன்னார். அடுத்த நாள் அவர்கள் இருவரும் ஆற்றங்கரையில் சந்தித்தனர். சாக்ரடீஸ் அந்த இளைஞரை தன்னுடன் ஆற்றை நோக்கி நடந்து வரும்படி கேட்டுக்கொண்டார். தங்களது கழுத்தளவிற்கு ஆற்றுநீர் வந்தவுடன் சாக்ரடீஸ் அந்த இளைஞரைத் திடீரென நீரினுள் பிடித்து அழுத்தினார். அந்த இளைஞர் வெளியே வரப் போராடினார். ஆனால் சாக்ரடீஸ் மிகவும் வலுவானவர். ஆதலால் அப்படியே அவரை அமுக்கியவாறு அவரது முகம் நீல நிறமாக மாறும் வரை வைத்திருந்தார். சற்றுப் பொறுத்து சாக்ரடீஸ் அவரது தலையை நீருள்ளிருந்து வெளியே இழுத்தவுடன் அந்த இளைஞர் செய்த முதல் வேலையை தன்னால் இயன்ற அளவு காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்ததுதான். சாக்ரடீஸ் அவரிடம் நீ நீருக்குள்ளே இருந்த போது நீ எதை அதிகம் விரும்பினாய் ? என்று கேட்டார். உடனே அந்த இளைஞர் காற்று என்று பதில் அளித்தார். சாக்ரடீஸ் அவரைப் பார்த்து வெற்றியின் இரகசியமே இதுதான் என்றார். நீ எவ்வளவு அதிகமாக





நீருக்குள் இருக்கும் போது காற்றை விரும்பினாயோ அதைப்போன்று வெற்றியையும் விரும்பினால் உனக்கு அது கிட்டும் என்று அவர் சொன்னார். இதைத் தவிர வேறு எந்த இரகசியமும் இல்லை.

மிகவும் மோசமான உடல் குறைபாடுகளைச் சமாளித்து வெற்றிபெற்ற மக்களின் கதையைப் படித்தால் அவர்களுக்கு இருந்த வெற்றிபெற வேண்டும் என்ற தீராத ஆசையே அவர்களின் உந்து சக்தியாக இருந்தது தெரியவரும். தடைகள் பல இருந்தாலும் அவர்களால் செய்யமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அதைச் செய்தும் முடித்தார்கள்.

முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட வில்மா ருடோல்ஃபைல் 1960 இல் ஒலிம்பிக் தடகள போட்டியில் அதிவேகப் பெண்மணியாக மாறினார். ஒலிம்பிக் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களை வெல்லச் செய்தது. அவரது வெல்லும் ஆசையே.

போலியோவினால் பாதிக்கப்பட்ட ஐந்து வயது சிறுமி இழந்த தனது சக்தியை மீண்டும் பெறத் தொடங்கினாள். வெற்றி பெற வேண்டும் என்ற அவரது ஆசையாலேயே மூன்று போட்டிகளில் உலக சாதனையாளராக ஆனாள் 1957 இல் நடந்த மெல்போர்ன் நகரில் நடந்த ஒலிம்பிக் தங்கக் கோப்பையை வென்றாள். அவள் பெயர் ஷெல்லிமான்.

குறிக்கோளும், பாதையும் இல்லாத போது வாய்ப்புகளை எதிர்பார்க்க முடியாது. ஒருவர் எதையாவது நிறைவேற்ற ஆசைப்பட்டால் அவருக்கு குறிக்கோளை அடைவதற்கு வழி கவனம் சிதறாமல் இருப்பதற்குக் கடின உழைப்பிற்குத் தேவையான கட்டுப்பாடு ஆகியவை மிக அவசியம். இவை இருந்தால் மற்றவை மிக எளிதில் வந்துவிடும். ஆனால் உங்களிடம் இவை இல்லை உங்களிடம் வேறு எதுவும் இருந்தும் பயன் இல்லை.

ஆசிரியர்குழு

அன்புடன் அழைக்கின்றோம் . . .

**ஆப்டிமா** *மென்ஸ் பேஷன்* A/C

**ஆண்கள்**

**ரெடிமேட் ஆடைகளின் உலகம்**

FORMALS & CASUALS

**OPTIMA**

**Mens Fashion A/c**

**(தீன் பிளாசா & LIC அருகில்)**

**No. 12, O.S.M. நகர்,**

**மயிலாடுதுறை.**








# விடுதலை

எனக்கு சோதிடத்தின் மீது
நம்பிக்கை இல்லை
ஆனாலும்
நான் சோதிடம் பார்த்தேன்
அந்தக் கிளியின் இரண்டு நிமிட
விடுதலைக்காக...!

# நகைச்சுவை

தீபன் : டேய் உனக்கு வயது என்ன?
பிரபு : ஆடி வந்தா இருபதுடா
தீபன் : ஆடாம வந்தா?
பிரபு : ?

ந.பாலா
இளம் வரலாறு (இலட)

# யார் சாதனை மனிதன்?

உலகத்தைப் பார்த்து வாழ்பவன்
சராசரி மனிதன்!
உலகமே பார்க்க வாழ்பவன்
சாதனை மனிதன்!!

இரா.சி.அருண்குமார்
முதுநிலை மின்னணு அறிவியல் (நிறை)

# வரதட்சணை நெருக்கம்

வரதட்சணை
பெண் சிசுக் கொலையை வளர்க்கும்
புது அத்தியாயம்!
21-ஆம் நூற்றாண்டிலும்
இது என்ன நியாயம்!
வரதட்சணைக் கொடுமையால்
மண்ணெண்ணெய் அடுப்பும்
வெடிக்கும்! — மனைவியைக் கொல்ல
குழந்தைகளின் உயிரும் துடிக்கும்!
உண்மையைச் சொல்ல
மனைவி தாலியோடே
ஏறும்போது
கணவன் மணமேடை ஏறும்
அவலநிலை இங்கு
ஏராளம்!
வரதட்சணை கேட்கும்
பெற்றோர்களின் மனமோ — இங்குத்
தாராளம்!
அன்றோ பண்டமாற்றுத்
திருமணம்!
இன்றோ பண்டம் இல்லாததால்
மாற்றுத் திருமணம்!
வரதட்சணையாக வாங்கித்
தந்தார்கள்
இருசக்கர வண்டி!
ஆனால் பிறகு அவர்கள்
ஆண்டியாக!
வரதட்சணை கொடுமையால்
வறுமையை எண்ணி! எண்ணி!!
பல அக்காக்களோ இன்று வரை
முதிர்கன்னி !
இன்றுதான் வரதட்சணை
ஆள்கிறது ராஜ்ஜியம்!
வருங்காலமோ அது ஆகவேண்டும்
பூஜ்ஜியம்!
நண்பா நீயும் யோசி!
வரதட்சணை இல்லாக் காற்றை
சுவாசி!



ஹைக்கூ ...

கல்விக் கடலில் பயணம் செய்ய
அரசு தரும் கப்பல்
"ஸ்காலர்ஷிப்"

த.கருணா அழகர்சாமி
முதுகணிதம் (முதல்)





# மனிதனும் தெய்வமாகலாம்

துன்பங்கள் நிறைந்த
வாழ்க்கையிலும் — முகம் மலர்பவன்
தெய்வமடா ! — பொருள் தன்னிடம்
இல்லா நிலையிலும் பிறர்க்குக்
கொடுப்பவன் தெய்வமடா !
அன்பை நாளும் அள்ளிக்கொடுக்கும்
அன்னை தெய்வமடா! — உயர் பண்பை
வாழும் நாளில் தந்த அண்ணா
தெய்வமடா!
பேரறிஞர் அண்ணா தெய்வமடா!
ஏறு பிடிப்பதால்
சோறு வழங்கிடும்
உழவனும் தெய்வமடா! — நம்
வாழ்வியல் நெறியை
வார்த்தையில் சொன்ன
வள்ளுவரும் தெய்வமடா!
திருவள்ளுவரும் தெய்வமடா
ஏழை கையிலும் ஏடு தந்த எங்கள்
காமராசரும் தெய்வமடா!
தொற்று நோயாளர்களை அரவணைத்த
தெரசா தெய்வமடா
அன்னை தெரசா தெய்வமடா!
வாழும் நாளை வீணாய்க் கழித்துப்
போவதில் பயனென்னடா? — நாம்
போன பின்னாலும் வாழ்வதை விட
தெய்வத்தின் நிலை என்னடா?



ஹைக்கூ ...
பக்கம்பக்கமாய் பேச நினைக்கிறேன்
ஆனாலும் அவள் பக்கத்தில் வரும் போது
முந்திக்கொள்கிறது - மௌனம்.



இரா.சி.அருண்குமார்
முதுநிலை மின்னணு அறிவியல் (நிறை)

மயிலை மாநகரில் மகளிர்க்காக நவநாகரீக டிசைன்களுடன்
சிறப்பாக செயல்பட்டுவரும் ஒரே நிறுவனம்

PARAGON LADIES *Fashion Maker*

உங்கள் எண்ணங்களை சிறப்பாக
வடிவமைத்துக்கொள்ள
இன்றே வருகை தாருங்கள்

PARAGON
LADIES
*Fashion Maker*



27/3, Vandikkara Street,
MAYILADUTHURAI -1.






# இந்திய வானொலியின் வரலாறு

இந்திய செய்தித்தாள் இருநூறு ஆண்டுகட்கு முந்தைய வரலாற்றுச் சிறப்பை உடையது. திரைப்படங்கள் நம் நாட்டில்1896இல் காட்சிக்கு வந்தன. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அவை இங்கேயே தயாரிக்கப்பட்டன. வானொலிச்சாதனம் நம் தாயகத்தில் 1926ஆம் ஆண்டில் குடி புகுந்தது. தொலைக்காட்சியோ 1959 இல் இங்கு அறிமுகமாயிற்று. நம் நாடு சுதந்திரம் பெற்ற வேளையில் 330 செய்தித்தாள்கள் 25 இலட்சம் வாசகர்களை நோக்கி நடைபோட்டன. இப்போது வாசகர்களின் வட்டம் பல கோடியாக விரிந்து இருக்கிறது.1947 ஆம் ஆண்டில் நம் பாரதம் 281 திரைப்படங்களை வெளியிட்டது. ஆனால் இப்போது ஆண்டு ஒன்றுக்க இந்த எண்ணிக்கையில் பன்மடங்கு அதிகப் படங்களைத் தயாரிக்கிறது. 1950 ஆம் ஆண்டில் நம் தாயகத்தில் வானொலிப் பெட்டிகள் எண்ணிக்கை 5 இலட்சமாக இருந்தது. இன்று இதன் எண்ணிக்கை 50 மடங்காக அதிகரித்துள்ளது. அண்மையில் மேற்கொண்ட கணிப்பின்படி நூற்றுக்கு 15 பேரே செய்தித்தாள்களைப் படிக்கின்றனர். 30 விழுக்காட்டினரோ வானொலிப் பெட்டியை உரிமையாகக் கொண்டுள்ளனர்.

இந்திய ஒலிபரப்பு நிறுவனம் 1927 ஆம் ஆண்டில் தொடங்கியதாயினும் 1924 ஆம் ஆண்டு மே 16 ஆம் நாளிலேயே சென்னையில் ரேடியோ கிளப் அமைக்கப்பெற்று அஃது ஒலிபரப்பைத் தொடங்கியது. அதே ஆண்டு சூலை 31 ஆம் நாள் ஒலிபரப்பு சேவையினைச் சென்னையில் மெட்ராஸ் பிரஸிடென்சி ரேடியோ கிளப் தொடங்கிற்று. நம் இந்தியாவில் 1927ஆம் ஆண்டு 23ம் நாள் 1.5 கிலோவாட் ஆற்றல் உள்ள ஒலிபரப்பின் மத்திய அலைவரிசையோடு இந்திய வைசிராய் இர்வின் பிரபுவினால் தொடங்கிவைக்கப்பட்டது.

அடுத்த 40 நாட்களுக்குள் கல்கத்தாவில் 1.5 கிலோவாட் ஆற்றல் உள்ள மத்திய அலைவரிசை ஒலிபரப்பினை அன்றைய வங்காள ஆளுநர் சர் ஸ்டேன்லி ஜேக்சன் என்பவர் தொடங்கி வைத்தார். அதே

ஆண்டு அக்டோபரில் சென்னை மாநகர ரேடியோ கிளப் இயக்கப் பெற்றது. சென்னை நகராண்மைக் கழகம் 1930 ஏப்ரல் முதல்நாள் ஒரு முறையான ஒலிபரப்புச் சேவையைத் தொடங்கியது.

1938 ஜூன் 16இல் சென்னை நிலையம் அன்றைய ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் தொடங்கி வைக்கப்பெற்றது. தொடர்ந்து 1931 ஆம் ஆண்டு மே 16ல் ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் திருச்சிராப்பள்ளி நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. 1939 அக்டோபர் இல் அகில இந்திய வானொலியானது டெல்லி நிலையத்திலிருந்து தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மராத்தி, புஷ்டு ஆகிய மொழிகளில் செய்தி அறிக்கைகளை அறிமுகம் செய்தது. இதற்கு முன்பே ஆங்கிலம், இந்துஸ்தானி, வங்காளம் ஆகிய மொழிகளில் செய்தி அறிக்கைகள் ஒலிபரப்பாகி வந்தன.

அகில இந்திய வானொலியானது நாள் ஒன்றுக்கு 239 செய்தி அறிக்கைகளை 32 மணிநேரக் கால அளவில் ஒலிபரப்பானது. இவ்வொலிபரப்பில் 67 அறிக்கைகள் 19 மொழிகளில் டெல்லி நிலையத்திலிருந்து ஒலிபரப்பானது. இதே டெல்லியிலிருந்து 24 மொழிகளில் 64 வெளிநாட்டுச் செய்திகள் தரப்பட்டன. 34 மண்டல நிறுவனங்களிலிருந்து 115 மண்டல மொழி செய்தி அறிக்கைகள் ஒலிபரப்பு செய்யப்பட்டன.

1939 ஆம் ஆண்டு மார்ச்சில் நம் இந்திய நாட்டில் 8 இந்திய ரேடியோ நிலையங்கள் இயங்கிவந்தன. விடுதலைக்குப் பின்னர் 1947இல் நம் நாட்டில் 6 நிலையங்களே இருந்தன. இன்றோ 95 நிலையங்கள் இந்தியாவில் இணைக்கோப்புகளாய் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுடன் பண்பலை ஒலிபரப்பு நிலையங்கள் 44, விவித பாரதி வர்த்தக ஒலிபரப்பு 27 தேசிய பண்பலை நிலையங்கள் 4 ஆகியவை இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் தற்போது நமது பாரத நாட்டு மண்ணில் 95 விழுக்காடு பரப்பளவைத் தமது வானொலி ஒலிபரப்பால் தொடுகின்றது. 95 விழுக்காடு மக்களை இந்நிலையங்களின் நிகழ்ச்சிகள் சென்று அடைகின்றன என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.





# நடப்பது ... நியதி



பிறப்பது இறப்பதற்காக அன்று
நம் பிறப்பை இவ்வுலகத்திற்குத்
தெரிவிக்க நமக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு
உன் (நம்) தோல்விக்கெல்லாம்
காரணம் தேடுவோம்
துவண்டுபோனால் எதிர்காலத்தில்
தொலைந்து போகும் நம் கனவு
கஷ்டங்கள் எப்போதும் நிரந்தரமல்ல
நம் கனவுகள் ஒரு போதும்
தோற்பதுமில்லை
நம்பிக்கையும், முயற்சியும், உழைப்பும்
நம்மிடம் இருந்தால் யாரும்
நாளைய உலகில் சளைத்தவன் அன்று!
துன்பத்தைத் துன்பமாக எடுத்துக்கொள்பவன்
துன்பத்தில் வாழ்க்கையை ஓட்டுகிறான்
துன்பத்தை விருப்பப்பட்டு ஏற்றுக்கொண்டவன்
விருப்பம்போல வாழ்ந்துக்காட்டுகிறான்
இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக நினைத்து
வாழ்ந்தவன் – நாளை
கல்லறைக்குப் போனாலும்
காலத்தை வென்று நிற்கிறான்!

க.குமார்
முது தாவர & உயிர் தொழில்நுட்பவியல் (துறை)

*Life Lovely-la erukkanumna*
*Vanga Lovely Browsing & Ice Creams - ku*

**Ph : 04364 - 222517**
**Cell : 9443235172**

# LOVELY BROWSING & ICE CREAMS

**(NOW WITH 2048 kbps BROAD BAND HIGH SPEED CONNECTIVITY)**



- STD, ISD, PCO
- Internet
- E-mail
- DTP
- Scanning
- Colour Print & Laser Print
- Voice Chat & Web Cam.
- CD Writting
- Available CD & Floppy
- All Project Works Done Here.
- Available Cooldrinks & Ice Creams

Opp : Bus Stand, Hotel Imbala,
Kiliyanur N.M. Zackariya building, Mayiladuthurai 609 001.
Email : Lovelybrowsing@yahoo.co.in






# கைவிரல்களின் காவியக்கோடுகள்



எம்.கனிவண்ணன்
இளம் கணிதம் (முதல்)



சி.அன்புராஜ்
இளம் விலங்கியல் (நிறை)





ஏ.விஜயலட்சுமி
இளம் இயற்பியல் (நிறை)



ஜெ.சர்மிளா
இளம் வணிக மேலாண்மை (முதல்)



ஏ.அனிதா
இளம் இயற்பியல் (நிறை)



பி.வரலெட்சுமி
இளம் இயற்பியல் (நிறை)



எம்.சர்மிளி
இளம் கணிப்பொறி பயன்பாட்டியல் (முதல்)





# நற்குணங்கள்



அடக்க வேண்டியது - கோபம்
ஒதுக்க வேண்டியது - கவலை
பெற வேண்டியது - ஞானம்
தர வேண்டியது - தானம்
பேச வேண்டியது - உண்மை
காட்ட வேண்டியது - கருணை
விட வேண்டியது - அகங்காரம்
சேர்க்க வேண்டியது - கல்வி
பாதுகாக்க வேண்டியது - மானம்
வெற்றிபெற வேண்டியது - முயற்சி
செய்ய வேண்டியது - நற்செயல்கள்

க.சிந்துஜா
இளம் நுண்ணுயிரியல் (நிறை)

# வெங்காய சிறப்பு

- வெங்காய சாற்றை மோருடன் கலந்து குடித்தால் இருமல் குணமாகும்.
- சாதாரண தலைவலிக்கு வெங்காயத்தை நசுக்கி முகர்ந்து பார்த்தால் உடனே குணமடையும்.
- வெங்காய சாற்றை எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.
- வெங்காயத்தை வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நரம்பு தளர்ச்சி குணமாகும்.

ஜீ.மீனாட்சி
இளம் நுண்ணுயிரியல் (நிறை)

# TATTI

(TamilNadu Advanced Technical Training Institute)

Regd.BY GOVT. OF TAMILNADU, BOUND TO GOVT. OF INDIA

**COMPUTER HIGHER EDUCATION**

## 10th YEAR ANNIVERSARY CELEBRATIONS

***OUR COURSE COMBINATION WITH EXCELLENT OFFER***

- **Diploma in software & hardware**
- **Tally (Latest) Autocad 2007**
- **Course with Project for**
  - **Complete J2EE**
  - **.net (VB.net, Asp.net, C#)**
  - **Multimedia (Photoshop CS3, Flash, 3D MAX)**

**MAXIMUM FOR MINIMUM**

**QUALITY TRAINING**
**+**
**VALUABLE CERTIFICATE**

(மத்திய மற்றும் மாநில அரசின் நிரந்தர அங்கீகாரத்துடன்)

**SPECIAL COACHING**
**FOR UG & PG ENGINEERING**
**STUDENTS COMPUTER PROJECTS**

*"Delay is the enemy of efficiency"*

*Keep in touch, (Prop: Jc. G.Nedunchezhiyan)*

**13-D, IInd Floor, Cutchery Road,**
**Mayiladuthurai. ☎: 241129 Cell :9865092034.**
**H.O: Gee.Gee. Complex, 42/25, Anna Salai, Chennai - 2.**






## நினைவுகள்



அழகான பூக்களும்
உன்னை நேசிக்கும்
உன் சிரிப்புக்காக!

தேனீக்களும்
உன்னை
அடைய விரும்பும்
இதழ்
தேனுக்காக

மஞ்சளும்
மங்கித்தான் போகும்
உன் அழகிய
மேனியைக்கண்டு
குயிலும் கலைந்து போகும்
உன்
இனிய குரலைக்கண்டு

அன்பே
அத்தனையும் விரும்பும்
நீ
அன்பானவனை
விலக்கிவிட்டாயே
என்னை மட்டும்
கொள்கிறது
உன்
இனிய நினைவுகள்

இரா.சிவராமன்
இளம் கணிதம் (இடை)

# இந்தியப் போர் வீரன்...

வீரனே! வீரனே!!
இந்தியப் போர் வீரனே
பசி, தூக்கம் கருதாமல்
பனி, காற்றென்று பாராமல்
உன் பணியை மேற்கொள்வாயே
உன் உயிரை
உன் தாய் நாட்டிற்கென
உயில் எழுதித் தந்தாயோ
ஒவ்வொரு நாளும் நான் இந்தியன்
என்று முரசறைந்து முழக்கமிடுவாயே
இந்திய மண்ணிற்குப் பாதகம் நினைக்கும்
தலையைத்தரையில் உருண்டோடச் செய்வாயே
எல்லையை காக்கும் தெய்வமும் நீயே
நீ இறந்தபின் எவரெஸ்ட் சிகரமும்
உன் புகழ் பாடுமே!

## நகைச்சுவை

அமைச்சர் : மன்னர் பேயரைஞ்ச மாதிரி இருக்காரே

தளபதி : மகாராணியை அலங்காரம் இல்லாமல் பார்த்துவிட்டாராம்.

வினோத்ராஜ்
இளம் வேதியல் (இடை)





# போதை

கொட்டும் பனியில்
எரித்துக் குளிர்காய
ஒரு பண்டலை போதை பண்டலை!
எரியுங்கள்!
சாதிமத வெறிகளை எரியுங்கள்!
நீங்கள் மனிதனாக மாறுங்கள்
பிற நாட்டிடம் கையேந்தும்
எண்ணத்தை
எரியுங்கள்!
நம் நாட்டை வல்லரசாக
மாற்றுங்கள்
தீவிரவாதத்தைப் போட்டு
எரியுங்கள்!
மக்களுக்கு நல்லதொரு
பாதுகாப்பை ஏற்படுத்துங்கள்
போதை வேண்டாத குப்பைகளை
எரிப்பதற்கு அல்ல
நம்முடைய தீய எண்ணங்களை
ஒழிப்பதற்காகவும்தான்!

இரா.சி.அருண்குமார்
முதுமின்னணு அறிவியல் (நிறை)

இப்பொழுது வேறு எங்கும் கிடைக்காத
மிக குறைந்த விலையில்

LG intello air
Art flower splits

Carrier
Turn to the Experts



- இந்திய அரசு மின் சிக்கனத்தை வலியுறுத்தி அறிவுறுத்தியுள்ள ஸ்டார் ரேட்டிங் A/c's
- ஐந்து வருட கம்ப்ரஸர் வாரண்டி • 0.75 Ton 30 Ton வரை
- பல்வேறு கலர் பேனல் மாடல்.
- பைனான்ஸ் வசதி

LG Electronics (I) - companyயின்
அங்கீகாரம் பெற்ற Distributer :

சிவசக்தி ஏஜென்ஸி

34,A/5, பட்டமங்கலத் தெரு, (அர்பன் பேங்க் சந்து),
மயிலாடுதுறை–1.

சேல்ஸ் - சர்வீஸ் - ஸ்பேர்ஸ்

போன்: 04364-227133 செல்: 9443187562 / 9360521480








# பேச்சாற்றலும் பத்துக்கட்டளைகளும்

பேசுவது ஒரு கலை மட்டுமன்று; ஆற்றலும்கூட என்பதை நாம் எல்லோரும் கண்டதுதான். பத்து செய்திகளை மனத்தில் நிறுத்தி நடைமுறையில் கையாண்டால் வெற்றி உறுதி.

## 1. சொற்கள்

பேச்சுக் கலையில் நீங்கள் கையாளும் கருவி சொற்கள். நீங்கள் எந்தச் சொற்களை எப்படிக் கையாளுகிறீர்கள் என்பதில்தான் வெற்றியிருக்கிறது. 'சொற்கள் – பாலங்களைக் கட்ட வேண்டும் இணைப்பை உண்டாக்கத் தான் சொற்களே ஒழிய துண்டிப்பதற்காக அல்ல' என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உயர்தரமான பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட மாளிகை உறுதியாக நிற்பது போல நல்ல சொற்களால் கட்டப்பட்ட நட்புறவு நீடிக்கும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்ற குறள் சொற்களின் பெருமையை உணர்த்துகின்றது. எனவே, நன்மை பயக்கும், இனிமையான சொற்களையே பயன்படுத்த வேண்டும்.

## 2. ஈடுபாடு – சுவை

உங்கள் பேச்சினைக் கேட்டால் சுவைக்கும்படி இருக்க வேண்டும். "அவருடன் பேசினால் நேரம் போவதே தெரியவில்லை; அந்த

அளவுக்குச் சுவையாக பேசுகிறார்" என்று மற்றவர்கள் சொல்ல வேண்டும்.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

உங்களைத் தனிப்பட்ட முறையில் வெறுப்பவர்கூட உங்கள் பேச்சை விரும்பிக் கேட்கும் வகையில் பேச்சு அமைதல் வேண்டும்.

### 3. நகைச்சுவை

பேச்சுக்குச் சுவை ஊட்டுவது நகைச்சுவை. நாகரீகமான – யார் மனத்தையும் புண்படுத்தாத நகைச்சுவையை அளவாகப் பயன்படுத்த நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் நகைச்சுவைக்காக ஒரு கூட்டமே உங்களைச் சுற்றி இருக்கும்.

### 4. சுருக்கம்

நேரம் அனைவருக்கும் முக்கியம். ஆகவே காலம், கேட்பவர் மனநிலை கருதி எதையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல வேண்டும்.

### 5. உடல்மொழி

நீங்கள் பேசாவிட்டாலும் உங்கள் உடல் பேசும் என்பார்கள். நீங்கள் உட்காரும் விதம், கையை வைத்திருக்கும் விதம், கால்கள், கண்கள், விரல்களைக் கொண்டே உங்களை எடைபோட்டுவிட முடியும். அதற்கேற்ப உங்கள் உடலசைவைத் தீர்மானியுங்கள்.

### 6. அலட்டல் வேண்டாம்

'அரைகுடம் தளும்பும் என்பார்கள்' தற்பெருமை, பந்தா அலட்டல், பேர்வழியாக உங்களை எடைபோடும்படி உங்கள் பேச்சு அமையக்கூடாது. உங்கள் மீது முதலில் பொறாமையும், பின்பு இனந்தெரியாத வெறுப்பும் உண்டாகும்.





### 7. அடக்கமும் வேண்டாம்

மிக அதிகமான எளிமை, அடக்கம், பணிவுடன் வளைந்து நெளிந்து, குழைந்து பேசினால் உங்களைக் கோழை என்றும் இளிச்சவாயர் என்றும் எண்ண வாய்ப்புகள் உண்டு. ஆகவே ஆற்றல் மிகுந்த நல்ல பண்பான மனிதராகக் காட்டிக் கொள்ளுங்கள்.

### 8. குறிப்புகள்

மிக அதிகமான எளிமை, அடக்கம், பணிவுடன் வளைந்து நெளிந்து, குழைந்து பேசினால் உங்களைக் கோழை என்றும் இளிச்சவாயர் என்றும் எண்ண வாய்ப்புகள் உண்டு. ஆகவே ஆற்றல் மிகுந்த நல்ல பண்பான மனிதராகக் காட்டிக் கொள்ளுங்கள்.

### 9. ஒத்திகை

போட்டி, மேடைப்பேச்சு, விவாதங்களின் போது முன்கூட்டியே ஒத்திகை பார்த்தபின் கலந்துகொண்டால் விளைவுகள் அற்புதமாக இருக்கும்.

### 10. கேட்டல்

தொடர்ந்து பேசிவிடுவது மட்டும் பெருமையன்று மற்றவர் பேசுவதையும் கூர்ந்து கேட்க வேண்டும். கேட்கும் போது ஈடுபாடு, அன்புகூர்ந்த பார்வை, இரக்கம் ஆகிய உணர்வுகளோடும் கேட்பது முக்கியம். ஒருவர் தன் குறைகளையெல்லாம் உங்களிடம் கொட்டித்தீர்த்து நிறைவுடன் செல்லக்கூடிய வகையில், நீங்கள் கேட்க வேண்டும்.

ஆசிரியர்குழு

Power INSYS
The Leading IT Academy
COMPUTER EDUCATION

34/A-10, பட்டமங்கலத்தெரு,
ஹாஜா மெடிக்கல்ஸ் 2வது மாடி,
(அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகில்)
மயிலாடுதுறை - 609 001.

The Latest IT Course

For Computer Courses

- IT - Officer (Ms - Office)
- Designer (DTP)
- Web Master (ASP.net)
- PC Teknologist
- Tally 9
- VC Specialist (C,C++)
- Oracle Professional
- VB Master (VB.net)
- Java Expert (J2EE)
- CAD Engineer

Tally - 9
Not Just Tally it is Tally More

Insys Tally Accounting Professional VAT, Tax, TDS, Service Tax.

For More Details our Receptionist Ph : 04364 - 240025





அட்மிஷன் நடைபெறுகிறது...
மயிலாடுதுறையில் ஒர் புதிய உதயம்

Rush Now!
தமிழ்நாடு அரசு ஆணை
எண் 245

SK School of Nursing

Get Your Chance !!
GO (MS) 245

S.K. SCHOOL OF NURSING
FOR WOMEN

டிப்ளமோ இன் நர்ஸிங் -ஸ்டாப் நர்ஸ் கோர்ஸ்
DIPLOMA IN NURSING - STAFF NURSE COUSE

கல்வி தகுதி : +2 தேர்ச்சி அனைத்து பாடப்பிரிவுகளும்
காலம் 3½ ஆண்டுகள்

- வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் தகுதி உடையது.
- வங்கி கல்விக்கடன் வசதி உள்ளது.
- ஹாஸ்டல் வசதி உண்டு.

S.K. SCHOOL OF NURSING FOR WOMEN

47/48, பெரிய சாலியத்தெரு,
(பூக்கடை பஸ் நிறுத்தம் அருகில்)
கூறைநாடு, மயிலாடுதுறை – 609 001.
தொடர்புக்கு : (04364)227476, 9865353476

Administrative Office :
31/32, அண்ணா வீதி, சக்தி இல்லம், கூறைநாடு, மயிலாடுதுறை.

**MICRO - SYS**
INSTITUTE OF INFORMATION
COMMUNICATION TECHNOLOGY
THE POWER OF DEVELOPMENT

**TCPS**
I.T.EDUCATION
SIMPLY THE BEST
AN ISO 9001 : 2000 CERTIFIED INTITUTION

## AMAZING FIRST ADVANTAGES IN INDIA

- *First Time with public semester examination... First Time training in regional languages...*
- *First Time Free Books for all...First Time Free Transfer... First Time Free Course Fees...*
- *First Time National Level Top Rankers Awards & Certificates...*
- *First Time Employment Registered Mark Sheets & Certificates...*
- *First Time High Quality Computer Education for Lowest fee Structure in India...*
- *First Time Opportunity to learn and secure valuable Diplomo from a leading & reputed I.T. Training Organization which has 400 Centers in South India alone...*

WEARE THE FIRST... TO SERVE YOU THE BEST...

## AMAZING ACHIEVEMENTS OF OUR INSTITUTE

- *Our Institution won "BEST NEW CENTER AWARD" during June 2006 Public Semester Exam from 400 Study Center in India...*
- *Our Institution won "BEST PROMOTION NEW CENTER AWARD" during December 2006 Public Semester Exam from 400 Study Center in India...*
- *Our Institution won "BEST EDUCATION CENTER AWARD" during June 2007 Public Semester Exam from 400 Study Center in India...*
- *Our Institution won "BEST PROMOTION CENTER AWARD & BEST EDUCATION CENTER AWARD" during December 2007 Public Semester Exam from 400 Study Center in India...*

*If You Become an Achiever in Computer Field...*
*Then Enter and Study Your Course Here...*

**ADDRESS FOR COMMUNICATION**

**MICRO - SYS Computer Institution** (Afilied by T.C.P.S)
A2-First Floor, Malick Mansion,
(Opp : DBTR National Hr.Sec.School)
15/26, Mahadhana Street,
MAYILADUTHURAI - 609 001.
CONTACT or SMS for More Details ... **9865292616**





# நீதான்...

வயலைக் கடந்து
பறக்கும் வரை
உனக்கு வறுமை
தெரியவில்லை...
வரவை மீறி
செலவு செய்வதால்
அதன் வரவே
தெரிவதில்லை...
தூங்கிக் கழித்த
நாட்களெல்லாம்
இரவானது....
எப்போது விடியும்
என்ற கேள்வி மட்டும்
அடிக்கடி எழுந்தன...
கருவில் வளர்ந்தவன்
உருவில்
மாற்றங்கள் வரலாம் – உன்
தாய் உறவிலும்
மாற்றங்கள் வேண்டுமோ
தொட்டு அணைத்து தூக்கும் போதும்
கை தொட்டுகள் முத்தம் வாங்கும்
ஏதுமறியா பருவம் அன்றோ
நீ குழந்தை
உன் தாய் சேலையில்
உலகம் மறந்து
உறங்கினாய் அன்று
இருந்தது ஒன்றுதான்
என்பதை மறந்து
இன்றும்
தாயை மறந்து
உறங்குவது ஏனோ?
சில கன்று
அன்பை பெற்று
ஏமாற்றிவிட்டாய் இன்றோ!
உன் தாய் அன்பகத்தில்
பத்து மாதம்
பத்தியம் பல கடந்து
உயிரைப் பிரிக்கும்
வலியைக் கொடுத்த
வேளையில் கூட
உன் தாய் மகிழ்ந்திருப்பாள்
பத்தரை மாற்றுத்
தங்கம் பிறப்பானென்று
உதிரம் துவைத்து வந்த உனக்கு
முதல் உணவைக் கொடுத்தவள்
தாய் இறுதிச் சடங்கிற்குக் கூட
வர நேரமில்லை
எப்படித் தாங்குமோடா இவ்வுலகம்.

கொ.அன்புகுமார்
முது உயிர்த்தகவலியல் (நிறை)

# சாகசமும் சர்ச்சைகளும்



**வீரமணி**
இளம் காட்சி நகவியல் (நிறை)





# வால் நட்சத்திரங்கள் ஒரு கண்ணோட்டம்...

ஏராளமான வால் நட்சத்திரங்கள் வான்வெளியில் காணப்படுகின்றன. வாலுடன் பிரகாசமாகத் தென்படுகின்ற நட்சத்திரங்களை வால்நட்சத்திரங்கள் எனக் கூறுகிறோம். வால்நட்சத்திரங்கள் மற்ற நட்சத்திரங்களைவிட மாறுபட்டது. அது சூரியனை ஒரு குறிப்பிட்ட வட்ட பாதையில் சுற்றிவருகின்றன. வால்நட்சத்திரத்திற்கு தலை வால் என இரு பகுதிகள் உண்டு.

பல வால்நட்சத்திரங்களின் தலைப்பகுதி மட்டும் சூரியனைவிடப் பல மடங்கு பெரியதாக காணப்படுகிறது. அவற்றின் வால் லட்சக்கணக்கான மைல்கள் நீண்டுள்ளது. வால் நட்சத்திரங்கள் பாறைகள் தூசுகள் வாயுக்கள் இவற்றால் ஆனவை. அவற்றின் வால்பகுதியில் நீராவி, அம்மோனியா வாயு, மீத்தேன் வாயு, பனிக்கட்டி துகள்கள் நிறைந்து இருக்கின்றனவாம். இந்தப் பனிக்கட்டிகள் மீது சூரிய ஒளி படுவதால் பிரகாசமாகத் தெரிகின்றன. வான்வெளியில் வெவ்வேறு நேரங்களில் ஆயிரக்கணக்கான வால் நட்சத்திரங்கள் காட்சி அளிக்கின்றனவாம்.

ஒவ்வொர் ஆண்டும் சராசரியாக ஒன்பது புதுப்புது வால்நட்சத்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வால்நட்சத்திரத்தில் மிகப்பெரியது ஹாலி. இது 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமிக்கு அருகில் வரும். 1682-ல் இங்கிலாந்தைச் சேர்ந்த எட்மண்ட் ஹாலி என்பவர் இதைக் கண்டுபிடித்தார். சில வால்நட்சத்திரங்கள் ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமிக்கு அருகில வருகின்றன. இதன் கணக்குப்படி பார்த்தால் அந்த வால்நட்சத்திரங்கள் பூமியை ஒரு சுற்றுசுற்றிவர ஆகும் காலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகுமாம். சில காலங்களில் வால்நட்சத்திரங்கள் பூமியை நெருங்கும்போது பொடிப்பொடியாக்கப்பட்டு இடிபாடுகளின் தூசிகள் பூமியின் மேல் விழுகின்றன.

பழங்காலத்தில் வால்நட்சத்திரம் தோன்றினால் அது கெட்ட சகுனம் என்றார்கள். மழை பெய்யாது, வறட்சி ஏற்படும், தொற்று நோய் ஏற்படும் என்று நம்பி வந்தார்கள். ஆனால், உண்மை அதுவன்று. இந்த வால்நட்சத்திரங்கள் தோற்றம் பற்றிச் சரியான தகவல் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே உண்மை.

**அ.நடராஜன்**
முதுகலைத் தமிழ் (முதல்)




Ph : 220486
Cell : 9443984335

# Micro-Chip

(A Computer Showroom)
sales service & all computer peripherals Available


*Contact :*

No. 4, Agorasasthirigal Building,
1st floor,
77, Pattamangala Street,
Mayiladuthurai -609 001.






# தேடினால் கிடைக்கும்



எழிலார்ந்த சூழ்நிலையில் எழுந்து நிற்கும்
வீட்டிற்குள் என்ன தேடுகிறாய்
உன் தாய் தொலைத்த வாழ்க்கை
உன் தந்தை சிந்திய வியர்வைத்துளி
உன் உடன் பிறப்புகளின் உழைப்பு
அல்லது உன் எதிர்காலம்
தேடு தம்பி தேடு
நம் முன்னோர்கள் தொலைத்தவை
ஒரு சிலரால் இங்கேதான் மறைக்கப்பட்டுள்ளது
தேடுவதில் முழுமையாய் ஈடுபடு
நீ தேடுவது ஒரு நாள் கிடைத்தே தீரும்
தேடுதல் உண்மையானால்.

எஸ்.சுகந்தி
முது வணிகவியல் (நிறை)

# பயணம் முடிவதில்லை



என்றோ ஒரு நாள் நீ எடுத்துக்கொடுத்த
பயணச் சீட்டு இன்னும் என்னுடன்
பயணம் செய்துகொண்டிருக்கிறது.

# கண்ணீர்



கண்களை விட
கண்ணீருக்கு சக்தி அதிகம்
கண்கள் உருவத்தைப் பார்க்கும்
கண்ணீர் உள்ளத்தைப் பார்க்கும்

து.பிருந்தாவன்
இளம் கணிதம் (இடை)

Don't Miss it

Students Can Encash Their Marks Now

SUMMIT

- VB
- DCA
- IIS
- ASP
- C#
- XML
- WAP
- Hardware
- UNIX
- C, C++
- JAVA
- VC++
- HTML
- DHTML
- E.COM
- ORACLE 8i
- ACAD 2000
- SQL SERVER
- OFFICE XP
- VBSCRIPT
- JAVA SCRIPT

(+1 / +2)

75% MERIT

SCHOLARSHIP AWARDS

| Percentage of Marks in S.S.L.C., +2 / Graduates | Percentage of Scholarship Offered |
|---|---|
| 90% and above | 75% |
| 80% - 89% | 60% |
| 60% - 79% | 50% |
| 50% - 59% | 40% |
| Below 50% | 30% |

மதிப்பெண் சான்றிதழுடன் வாருங்கள்!

ஸ்காலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள்!!

You'll believe you can, when you're at

LCC Infotech Ltd

Lakhotia Computer Centre

(A Division of LCC Infotech Ltd.,)

30/6F, Deen Plaza, State Bank Road,

Mayiladuthurai. Phone : 242032





# நம்பிக்கைதான் நமக்கு எஜமான்



நம்பிக்கைதான் மனசுக்கு எஜமான். நம்பிக்கையும் எண்ணமும் இரண்டறக் கலக்கும்போது உருவாகும் அதிர்வலையை ஆழ்மனம் உடனடியாக கிரகித்துக் கொள்கிறது. பிரார்த்தனையில் நடப்பதுபோல அதைத் தெய்வீக சக்தியாக மாற்றிப் பரம்பொருளுடன் தொடர்பு கொள்ள வைக்கிறது.

நம்பிக்கை, காதல், செக்ஸ்... இந்த மூன்று உணர்ச்சிகள்தான் எல்லா உணர்ச்சிகளையும் விட அபார சக்தி வாய்ந்தவை. இந்த மூன்றும் ஒன்று சேரும்போது சிந்தனை உடனடியாக ஆழ்மனத்தை அடையும் வகையில் மாற்றம் அடைகிறது.

நம்பிக்கை என்பது ஒருவித மனநிலை சுயகட்டளைக் கோட்பாடின் மூலம் தனக்குத் தானே உறுதியோடு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு, அதை ஆழ் மனத்தில் பதிய வைத்து நம்பிக்கையை உருவாக்கிக்கொள்ள முடியும் அல்லது தூண்டி விட முடியும். சுய கட்டளை மற்றும் ஆழ்மனம் பற்றிய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களைப் பின்பற்றுவதன் மூலம் ஆழ்மனத்தை வசப்படுத்த முடியும்.

## தன்னம்பிக்கை சூத்திரம்

**ஒன்று :** என் வாழ்க்கையின் திட்டவட்டமான குறிக்கோளை அடைவதற்கான திறமை உடையவன் நான் என்பது எனக்குத் தெரியும். அதைச் சாதிப்பதற்காகத் தொடர்வது விடாப்பிடியாகச் செயல்பட வேண்டுமென்று என்னை நானே வலியுறுத்திக் கொள்கிறேன். அதிலிருந்து பின் வாங்கமாட்டேன் என்று இப்போது இங்கேயே உறுதியேற்கிறேன்.

**இரண்டு :** என் மனத்தில் வியாபித்திருக்கும் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து படிப்படியாக அதை மனம் நிஜமாக்கிக் காட்டும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் எப்படிப்பட்ட மனிதனாக மாற வேண்டும் என்று குறியாய் இருக்கிறேனோ அதை சுற்றியே தினமும் அரை

☎ : 242015.
Cell : 9894629954
9894804052

# Shreem Readymade

*(Passion For Fashion)*

**Exclusive Men's Fashion ShowRoom**

- Short Shirts
- Short T-Shirts
- Contra Formals
- Boot-cut jeans
- Anti Fit Jeans
- Bermudas
- Night Pants
- Sports Pants
- Gym Shorts
- T-shirts
- Vests
- Briefs
- Formal Wears

**GROUP SHIRTS**
**AVAILABLE ON ORDER**

**SHREEM READYMADE**
*43/1, Mahadhana Street,*
*Mayiladuthurai - 609 001.*
*Lunch Break : 2 to 4 p.m.*
*Sunday Holiday*





மணி நேரம் என் சிந்தனை ஓட்டமிடும் வகையில் என் எண்ணங்களை ஒருமுகப்படுத்துவேன். இப்படிச் செய்து என் மனதில் ஒரு தெளிவான சித்திரத்தைத் தீட்டிக் கொள்வேன்.

**மூன்று :** என் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ள ஆசை நிஜமாவதற்குச் சில நடைமுறை சாத்தியமான வழிமுறைகளைச் சுய கட்டளைக் கோட்பாடு மூலம் மனம் தேடிக்கண்டு பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும். எனவே, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்காகத் தினமும் பத்து நிமிடங்களை ஒதுக்குவேன்.

**நான்கு :** திட்டவட்டமான எனது வாழ்க்கை லட்சியத்தைத் தெளிவாக விளக்கி எழுதியிருக்கிறேன். அதை அடைவதற்குத் தேவையான தன்னம்பிக்கையை நான் வளர்த்துக் கொள்ளும்வரை எனது முயற்சியைத் தொடர்வேன்.

**ஐந்து :** உண்மையின் அடிப்படையிலும் நீதியின் அடிப்படையிலும் வராத எந்த அந்தஸ்தும், செல்வமும் நிலையானது அல்ல என்பதை முழுமையாக உணர்கிறேன். சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலன்தராத எந்தக் காரியத்தையும் நான் செய்யமாட்டேன். நான் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் சக்திகளையும், பிறரின் ஒத்துழைப்பையும் என் பக்கம் இழுத்துக்கொள்வதில் வெற்றி பெறுவேன் மற்றவர்களுக்குப் பணியாற்றத் தூண்டுதலாக இருப்பேன். பிறரைப் பற்றிய எதிர்மறையான கண்ணோட்டத்தால் வெற்றி கிடைக்காது என்பது பொறாமை, சுயநலம், பிறரின் குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்துவது என்பதையெல்லாம் களைந்துவிட்டு எல்லோரிடமும் நேசத்தை வளர்த்துக் கொள்வேன். என் மீதும், பிறர் மீதும் நான் நம்பிக்கை வைக்கப் போவதால் மற்றவர்களையும் என்னை நம்பும்படிச் செய்வேன். இந்தச் சூத்திரத்தை முழு மனத்தோடு ஏற்றுக்கொண்டு என் நினைவில் பதித்துக் கொள்வேன்.

ஆசிரியர்குழு




# காதல் ஓவியம்
## பேசும் காவியம்



நிலவின் காதல் ஒளியில்
ஒளியின் காதல் புவியில்
புவியின் காதல் கதிரில்
கதிரின் காதல் நீரில்
நீரின் காதல் மேகத்தில்
மேகத்தின் காதல் மழையில்
மழையின் காதல் நதியில்
நதியின் காதல் கடலில்
கடலின் காதல் அலையில்
அலையின் காதல் காற்றில்
காற்றின் காதல் சுவாசத்தில்
சுவாசத்தின் காதல் மனத்தில்
மனத்தின் காதல் மலரில்
மலரின் காதல் நிறத்தில்
நிறத்தின் காதல் மனிதனில்
மனிதனின் காதல் இதயத்தில்.

ஆர்.சண்முகப்பிரியா
இளம் கணிதம் (முதல்)



### காதல்

நொடிக்கு நூறு முறை இறப்பேன்
என் மரணம் உன் மடியில் என்றால்
இறந்த மறுநொடியில் பிறப்பேன்
என் வாழ்க்கை
உன்னோடு என்றால்

ஆனந்தி
இளம் நுண்ணுயிரியல் (நிறை)







# காதல் ஓவியம்
## பேசும் காவியம்



### மறப்பே நினைப்பு

என்னை நீ மறக்க நினைக்கும்
ஒவ்வொரு நிமிடமும் என்னைத்தான்
நினைக்கிறாய் என்பதை மறக்காதே.

ஆனந்தி
இளம் நுண்ணுயிரியல் (நிறை)



### நினைவு

நான் என் காதலனை நினைத்த
ஒவ்வொரு முறையும் வானத்தில் ஒரு
நட்சத்திரத்தைப் படைக்கசொல்லி
இறைவனிடம் கேட்டேன்
இரவில் வந்தால் பார்
நான் எத்தனை முறை என்
காதலனை
நினைத்தேன் என்று

மகேஸ்வரி
இளம் வேதியல் (முதல்)

### இரவில் பகல்

இரவில் பகலையும்
பகலில் இரவையும்
காட்டும்
அதிசயக் காலக்கண்ணாடி
காதல்.

ரா.சிவராமன்
இளம் கணிதம் (இடை)



ஸ்தாபகம் : 1973


☎ : 226065
Cell : 9443246065

**ஞானம் ஆனந்த்**

**லைட் & ஹெவி டிரைவிங் ஸ்கூல்**

(அரசு அங்கீகாரம் பெற்றது)

நெ. 2 ரோடு, கல்லறைதோப்பு தெரு,
மயிலாடுதுறை - 609 001.



கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கார், மாருதி கார், ஜீப், லாரி, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் சிறந்த முறையில் ஓட்டுனர் பயிற்சியளித்து ஓட்டுனர் உரிமம் பெற்றுத்தரும் கைராசி ஸ்தாபனம்.

Prop : **G.ரவிசங்கர்**  **G.ரகுராமன்** D.A.E.

குறிப்பு : பெண்களுக்கு மாருதி காரில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.






# ஐம்பெரும்பூதம்

## 1. மனம்

வெறும் காகிதம் இவற்றை வைத்துக்கொண்டு யார் உட்காரச் சொல்லி தூண்டியது? எந்த விஷயத்தில்? எந்த விஷயத்தில் உனது கருத்து என்ன? எதில் விருப்பு அல்லது வெறுப்பு என்றெல்லாம் தடபுடலாக வரிந்து கட்டிக்கொண்டு எழ வேண்டிய அவசியம்தான் என்ன? இதோ பார் எங்கும் ஒன்றுமே காணவில்லை. சுழற்காற்று ஒன்று புழுதி உலர்ந்த சருகுகளைப் பறக்கவிட்டு மைதானத்தின் நடுவில் எவ்வளவு அழகாக ஆடிவிட்டுச் சென்றது. இவ்வாறு மனித நடமாட்டம் இல்லாத வெட்டவெளியில் பகல் வேளைகளில் ஆடித்திரிகிறது. அதைப் பார்ப்பதற்கும் எவருமில்லை கருத்தோ தத்துவமோ சமூகமோ வரலாறோ இவை பற்றிய தக்க அறிவுரைகளோ எதுவும் கிடையாது. அதற்கு எளிதாய் ஒரே மூச்சில் கண்டவற்றை எல்லாம் மேலே எழுப்பி நிறுத்தி அழகாகச் சுற்றிப் பறக்க வைத்துப் பம்பரம் போல் ஆடிச்செல்ல என்னால் இயலும் யோசனை முயற்சி, லட்சியம் என எதுவுமே இல்லை. மனம் இருந்தும் இந்த காரியத்தைக் கைவிட இயலவில்லையே நாகரீகம் என்ற பெயரால் மனிதன் மனம் என்னும் தனது ஒரு பகுதிக்கு அளவுக்கு மீறிய இடத்தைக் கொடுத்து வளர்த்துவிட்டான். அதனை அவன் கைவிட வேண்டுமென நினைத்தாலும் அது அவனை விட்டால்தானே.

## 2. அகண்டமானது

உண்மையாகச் சொல்கிறேன் இப்போதெல்லாம் இயற்கையின் புகழைப் பாடுவதில் நீங்கள் மிகவும் அதிகப்படியாகவே சென்றுவிடுகிறீர்கள் என்றால் திருப்தி. அறிவைவிடப் புகழுக்கு நாம் உயர்ந்த இடம் அளிக்கிறோம். ஏன்? அறிவு தினமும் ஒவ்வொரு நிமிடமும் நமது பல்லாயிரம் வேலைகளை செய்து கொடுக்கிறது. அது இல்லாவிட்டால் நமது உயிரை காத்துக்கொள்வதும் கஷ்டம். நமது புகழ் எப்போதோ ஒரு நாள் நமக்கு உதவுகிறது. பல சமயங்களில் அனாவசியமாக குறுக்கிடுகிறது. ஆனால் அறிவு மனத்தைச் சேர்ந்தது. புகழ் மனத்தின் கட்டுப்பாடுகளை எண்ணாமல் திசையொன்று காற்றைபோல் வருகிறது.

இயற்கையில் அந்த மறும் என்பது ஒன்றுமில்லை. அதனால்தான் இயற்கை நமக்குப் பிடித்திருக்கிறது. கரப்பானின் மீது சிலந்தி பூச்சிகள் உட்கார்ந்து அதனை உறுஞ்சுவது இல்லை. மண்ணிலிருந்து ஒளி பறந்த வான்மறை அதனுடைய விசாலமான இல்லத்தினுள் வெளிநாட்டுப் பிள்ளைகள் ஏதுவும். புகுந்து அட்டூழியம் செய்தது இல்லை. அது தனிமையானது. சிதைவற்றது. நிறைவானது. அலைச்சலற்று அமைதியுடன் உள்ளது. அதனுடைய எல்லையற்ற நெற்றியில் அறிவு என்பதன் சுருக்கங்கள் இல்லை. புகழின் ஒளியே என்றென்றும் சுடர் விடுகிறது. இலட்சியத்துடன் பெரும்புயல் வீசுகின்றது. எல்லாம் அதனால்தான் விருப்பப்படியே நடக்கிறது.

## 3. தெளிவு

விஞ்ஞானத்தின் லட்சியம் தெரிந்து கொள்வதற்கும் தரிசனத்தின் லட்சியம் புரிந்துக்கொள்வதற்கும் தேவையான மற்ற விஷயங்களை எல்லாம் தெரிந்து கொள்ள கடினமாகிவிட்டது. இதற்காக எத்தனை பள்ளிகள், எத்தனைப் புத்தகங்கள் எவ்வளவு முன்னேற்பாடுகள் தேவைப்படுகின்றன. இலக்கியத்தின் குறிக்கோள் மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனால் அந்த மகிழ்ச்சியைப் பெறுவது அவ்வளவு எளிதன்று. அதற்குப் பலவிதமான கல்வி ,கேள்வி இவற்றின் உதவி தேவைப்படுகிறது.

கல்வி போதனையின்றி எது அறிய முடியாததோ அது விஞ்ஞானம் ஆகாது முயற்சியின்றி எதனைப் புரிந்துக்கொள்ள முடியாததோ அது தத்துவமாகாது. உழைப்பின்றி எது மகிழ்ச்சியை அளிக்கிறதோ அது இலக்கியமாகாது. மனிதனை படைத்த விதமே இப்படித்தான்.அவன் எளிய வழியை கண்டுபிடிக்க எவ்வளவுதான் முயன்றாலும் சுழல்களில் சிக்கிக்கொண்டு கிடக்க வேண்டியிருக்கிறது.பண்டைய அறிவையெல்லாம் ஒழுங்காக அமைக்க விஞ்ஞானத்தை உண்டாக்கினான். ஆனால் அந்த விஞ்ஞானத்தை புரிந்துக்கொள்வது கடினமான காரியமாக இருக்கிறது. சுலபமாக கொடுக்கல் வாங்கல் விஷயத்தை நடத்த நாணயம் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இதை தீர்த்து வைக்க யாரால் முடியும். சுலபமாக இருக்க வேண்டும் என்ற முயற்சியின் விளைவாக மனிதன் தெரிந்துக்கொள்ள வேண்டியவை உறவு, உடை, வேடிக்கை, விளையாட்டு இவையாவும் இன்று சிக்கலாகிவிட்டன.





## 4. வேடிக்கை – சிரிப்பு இவற்றின் எல்லை

துன்பத்தில் அழுகையும், இன்பத்தில் சிரிப்பும் இருக்கிறது. ஆனால் இதற்கிடையில் வேடிக்கை சிரிப்பு எங்கு வந்தது என்பது சற்று மறைமுகமானது. விலங்குகளும் இன்ப, துன்பங்களை அனுபவிக்கின்றன.

குறும்பினால் ஏற்படும் சிரிப்பும், வேடிக்கையினால் ஏற்படும் சிரிப்பும் ஒரே இனத்தைச்சார்ந்தவை இரண்டிலுமே ஒரு தீவிரம் உள்ளது. சாதாரணமான சுகத்திற்கும் வேடிக்கைக்கும் வித்தியாசம் உண்டு. மொத்தத்தில் ஒவ்வாமையின் யாழ் நரம்பில் மெல்ல மெல்ல சுருதி ஏறினால் வியப்பே சிரிப்பாகவும் சிரிப்பு படிப்படியாக கண்ணீராகவும் மாறப்படும்.

## 5. விஞ்ஞான ரீதியான வித்தை

நமக்கு இயல்பாக உள்ள ஆவல் உணர்விலிருந்து விஞ்ஞானம் பிறக்கிறது என்றாலும், நமக்குள்ள இவ்வுணர்வு விஞ்ஞான ஆராய்ச்சியின் சரியாக ஈடுபடவில்லை என்பதே எனது கருத்து. இந்த ஆவல் முழுக்க முழுக்க விஞ்ஞானத் தன்மையற்றதாகும். மனிதன் தோட்டத்தையெல்லாம் பொன்னாக்கும் சிந்தாமணியை தேடப்போய் மிகப்பழங்காலத்து பிராணி ஒன்றின் உலுத்துப்போன பெருவிரல் ஒன்றைத்தான் காண்கின்றான். அலாவுதீனின் அதிசய விளக்கைத் தேடிப்பிடிக்கப்போய் அவன் தீப்பெட்டியைத்தான் கண்டுபிடிக்கிறான்.

தந்தி காகிதம் இவைபற்றிய புறத்தத்துவ உண்மை கண்டுபிடிக்கப்படலாம். ஆனால் குறிப்பிட்ட காகிதத்துக்கும் தந்திக்கும் உள்ள நிச்சயமான தொடர்பு என்னவென்று நூறாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னராவது வெளியாகுமா என்றுதான் என் மனத்துள் ஐயம் எழுகிறது. அது ஒரு ரகசியமே ஆனால் அந்த ரகசியம் நிச்சயமாக காகிதம், தந்தி இவைபற்றிய ஆராய்ச்சியை நடத்த நடத்த நூற்றுக்கணக்கான கலைகள் உருவாகி வெளிப்பட்டே ஆகும்.

ஆசிரியர்குழு

பாலக்கரை அருகில் அமைந்துள்ள மிகப்
பிரமாண்டமான புதிய ஷோரூம் . . . .
50 ஆண்டுகால பாரம்பரியத்தின் புதிய முகம்
செய்கூலி இல்லை, சேதாரம் இல்லை.

சிவகுமரன்

தங்க நகை மாளிகை A/C
Ph : 226926
93-A, பட்டமங்கலத்தெரு,
பாலக்கரை அருகில், மயிலாடுதுறை.

பாண்டியன் ஸ்டோர்ஸ்
&
கிஃப்ட் சென்டர்



இங்கு அனைத்து வகையான கிப்ட் பொருட்கள்,
குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள், வாழ்த்து
அட்டைகள், பூச்செண்டுகள் அனைத்தும் சிறப்பாக ஒரே
இடத்தில் வாங்க சிறந்த நிறுவனம். . .
அனைத்தும் குறைந்த விலையில்
நிறைவான தரத்துடன் கிடைக்கும்.

#147, Mahadhana Street,
Mayiladuthurai. Ph : 226926





# அன்னை



உன் கைப்பிடித்து நடைப் பழகி
உடை உடுத்தி அவள் இடைக்குலுங்க
உன் சுமை சுமந்து சுகம் தந்தவளடா
உன் அன்னை உன் பசி மறக்க பாலூட்டி
சோறூட்டி சீராட்டித் தன்னை மறந்து
தன் கணவனையும் மறந்து
உன்னை நினைத்து உருகுலைத்தவடா
உன் அன்னை நீ கல்வி பயில அவள்
வயல்காட்டில் வெறுங்காலில் நடை
நடந்து இடை ஒடிந்து
தன் சுகம் மறந்து
உன் முகம் நினைத்து
தன் வியர்வை பூமியில் சிந்தி
பாடுபட்டவளடா உன் அன்னை நீ
மனம் முடிக்க காலையென்றும்
மாலையென்றும் பாராமல் இரவு
பகல் கண்விழித்துக் கல்லுடைத்து கரை
சேர்த்தவளடா உன் அன்னை இன்றோ
அவள் தன்னை மறந்து தன் நினைவு
இழந்து உடை கலைந்து உரு குலைத்து
வீற்றிருக்கிறாள் வீதியில்
நாதிகளற்று.

க.கலைப்ரியா
இளம் உயிரித் தொழில்நுட்பவியல் (நிறை)

Phone : 04364-274168
Cell : 98423 - 78067

ஸ்ரீ கஜேந்திரா

டிஜிட்டல் கலர் லேப்

டிஜிட்டல் ஸ்டுடியோ A/C.




- ஜெராக்ஸ், (கலர்)
- லேமினேஷன்
- ஆல்பம்
- பிலிம் ரோல் & பேட்டரி
- V.HS. to C.D.,
- வெள்ளை படத்தை கலர் படமாக மாற்றித்தரப்படும்
- பழைய சிதைந்த படத்தை புதுப்பித்துதரப்படும்.
- S.T.D I.S.D..PCO - FAX (04364 - 271214)

15 நிமிடத்தில் புகைப்படம் எடுத்துதரப்படும்.

4/1, சட்டநாதர் காலனி, [ TVS கம்பெனி எதிர் சந்து ]
சீர்காழி - 609 110.
[ புதிய பேருந்து நிலையம் அருகில் ]





# மாறிவிடுமா...

கந்தல் துணியைக் கசக்கி கட்டினால்
சிறந்த பண்பாடாகும்.
கிழிந்த ஆடைகளைத் தைத்துக் கட்டினால்
உயர்ந்த ஆடையாகும்.
இப்போது கைக்குட்டை அளவிற்கு ஆடை அணிந்து
விட்டு உடம்பு எல்லாம் கிழிந்து இருக்கிறது.
நாகரிகம் என்னும் வளர்ச்சியில் உலகம் தான்
சுருங்கிவிட்டன அறிவியல் முலம்நாகரிகம்
என்னும் பெயரில் ஆடைகளும் சுருங்கிவிட்டன.
இக்கால நாகரிக வளர்ச்சியில்.
வளர்ந்து வரும் நவீனம் வருங்காலத்தை
எதிர்கொள்ளுமா?
இல்லை ஆதிகால மனிதனாகவே மாறி
விடுவோமே விரைவில்
எதிர்க்கொள்வோம்...

ரா.பிரபு
முதுகலைத் தமிழ் (நிறை)

## படைத்தளம்

கல்லூரி சென்று
கவலைகளை மறந்து
கனவுகளை சுமந்து
உன்னை
உயர்த்த
உயிரோவியமாக தந்த
பெற்றோரின்
பேரிடர் நீக்க
பயிற்றுவிக்கும்
படைத்தளம்!

உனக்கோ! இளைஞனே!
உனக்கோ! யுவதியே!
எப்பொழுதும்
நினைவில் இல்லை - உன்
தாயின் கண்ணீர் - உன்
தந்தையின் தவிப்பு
உதறி விடு! பதறி எழு!
உன் உவையான உறக்கத்தை!
உணர்வு கொள்
உன்னை உறவு படைக்க! நாளைய
உலகமே உன் கையில
உவகையுடன்

அழகிய பரிசு
பொருட்களின்
சங்கமம்
வாழ்த்து
அட்டைகளின்
அணிவகுப்பு

வாருங்கள்
வரவேற்கிறோம்!
ஆதரவு தாருங்கள்
வளர்கிறோம்!!

**ஜகன் பைபிள்ஸ் & கிப்ட் சென்டர்**

**ஜகன் கிறிஸ்துவ இலக்கிய மையம்**

சிவாஜி கணேசன் வணிக வளாகம் (முதல் தளம்)
எண் 16, வண்டிக்காரத்தெரு, மயிலாடுதுறை - 609 001.
போன் : 04364 - 241330, 241493.





# வெற்றிக்கு ஒரே வழி

சிலரைப் பொறுத்தவரை வெற்றி என்பது வானத்திலிருந்து வருகிற வரம், கடவுள் கொடுக்கிற கொடை, ஜாதகம் செய்கிற ஜாலம். விதியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு வீணாக நேரத்தைக் கழிப்பவர்கள், எப்போதும் சாதிக்கப்போவதில்லை. காலமும், இடமும் கருதிச் செய்வது வெற்றிக்கு வழியென்று வள்ளுவர் சொல்லுகிறார். ஆனால், காலம் வருமென்று வெறுமனே காத்திருப்பவர்கள் வாழ்வில் புதுமைகள் பூப்பதில்லை.

வெற்றியாளர்களின் வரலாற்றிலெல்லாம் ஓர் ஒற்றுமையை உணரமுடியும். சாதிப்பதற்கு சம்பந்தமேயில்லாத சூழலில் பிறந்து வளர்ந்து சாதனையை சாத்தியமாக்கிக் கொண்டவர்கள் தான் அனைவரும். விரட்டும் வறுமை, மிரட்டும் வாழ்க்கைச் சூழல், அனைத்தையும் எதிர்கொண்டு போராடி வென்றவர்களே பெயர் சொல்லும் விதமாய் விளங்குகிறார்கள். சூழ்நிலை அமையட்டுமென்று சுதந்திர போராட்ட வீரர்கள் சும்மா இருந்திருந்தால், அடிமை இந்தியாவிலேயே நாமும் அல்லல் பட்டுக் கொண்டிருப்போம். மின்விளக்கு, வாகனங்கள், மருத்துவ சாதனங்கள், ஆலைகள் அனைத்துமே முதன்முதலில் உருவானபோது அதற்கான சூழ்நிலை அமைந்திருக்கவேயில்லை.

விரும்பும் இலக்கில் பயணம் செய்யவும், விரும்புகின்ற வெற்றிகள் எட்டவும் வாகான வெளிச்சூழலை விஞ்ஞானம் சுதந்திரமாய் நிலை நிறுத்தியுள்ளது. உயர்வுகளுக்கான உணர்வும், விருப்பமும் உள்ள உட்சூழல், நம் உள்ளத்தில் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. இணையதளத்தின் இன்றைய யுகம், எண்ணியவற்றை எண்ணியவாறே எட்டிபிடிக்க கை கொடுக்கிறது. ஆனால், ஆமை ஓட்டினால் ஆன மனதைக் கொண்டு அவதிப்படுகிறார்கள் மனதில் இரண்டு சிரமங்கள் இருக்கின்றன. ஒன்று வேகக் குறைவு. இன்னொன்று, உள்ளொடுங்கும் இயல்பு. உயர்வுக்கான பயணத்தைத் தடுத்து நிறுத்தும் தடைகள், இந்த இரண்டு குணங்கள். வேண்டிய வேகத்தை வெளிப் படுத்தாமையும், உள்ளொடுங்கும் தாழ்வு மனப்பான்மையும்தான் பல வீழ்ச்சிகளுக்கும் வழிவகுத்துள்ளது.

